III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.441/2019

Deposition of witness for the Plaintiff/PW1
solemnly by Tmt.R.Santhi, Translator
in accordance with the provision of Act I for 1873 on 28-08-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆர்.ரவிச்சந்திரன் | Village | : |
| Father's / Husband's Name | : ராமசாமி | Calling | : |
| Age | : | Taluk | : |

<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

பிரதிவாதி கீதாவின் கணவரை எனக்கு 1984 முதல் அவருக்கு திருமணம் ஆவதற்கு முன்பிலிருந்தே எனக்கு அவரை தெரியும். 3 வது வாதியான விக்னேசும் 2 வது பிரதிவாதியான கிருத்திகா அருள்ஜோதியும் ஒரே பள்ளியில் படித்தார்கள். நான் கீதாவிடமோ அவரது கணவரிடமோ 3 வது பிரதிவாதியின் படிப்பு சம்மந்தமாக எழுதப்பட்ட பேப்பரிலேயோ அல்லது எழுதப்படாத பேப்பரிலேயோ கையெழுத்து எதுவும் வாங்கியதில்லை. 2014, 2015 வாக்கில் எனக்கு Heart attack வரவில்லை. லிவர் பிராபலம் காரணமாக மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தேன். அப்போது பிரதிவாதியின் கணவர் எனக்கு உதவி செய்வதற்காக மருத்துவமனைக்கு வந்தார் என்றால் சரியல்ல. 12.12.2015 தேதியிட்ட வா.த.சா.ஆ.2 கடனுறுதிச் சீட்டு எனது தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.த.சா.ஆ.2 கடனுறுதிச் சீட்டில் கண்டுள்ள தொகைகளை எத்தனை தவணைகளில் கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. 17.08.2015 தேதியிட்ட வா.த.சா.ஆ.1 காசோலைக்குரிய பணம் பிரதிவாதியால் திரும்ப கொடுக்கப்படாத நிலையில் தான் வா.த.சா.ஆ.2 கடனுறுதிச் சீட்டில் கண்டுள்ள தொகையை 12.12.2015 அன்று கொடுத்தேனா என்றால் ஆமாம் அப்படி தான்

கொடுத்தேன். நான் ஓய்வு பெறும்பொழுது எனக்கு தோராயமாக 20 லட்சம் ரூபாய் வரை வந்தது. எனக்கு 20 லட்சம் ரூபாய் வந்ததை காட்டக்கூடிய வருமான வரி கணக்குகள் மற்றும் பான் கார்டை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதியின் கணவர் எனக்கு பணத்தை திரும்ப கொடுத்ததற்கான கணக்கை நான் வைத்திருக்கிறேனா என்றால் அப்படி அவர் எந்த ஒரு பணத்தையும் திரும்ப கொடுக்கவில்லை. பிரதிவாதியின் கணவர் 2 முதல் 4 வரையிலுள்ள வாதிகளின் வங்கி கணக்கிற்கு வாங்கிய பணத்தை திரும்பி செலுத்தியிருக்கிறாரா என்றால் வட்டி தொகை மட்டும் என்னுடைய மனைவியின் கணக்கிற்கு அனுப்பியிருக்கிறார். அந்த ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தோராயமாக வட்டி வகையில் 13, 14 லட்ச ரூபாய் பிரதிவாதி செலுத்தி வைத்தாரா என்றால் இல்லை. வட்டி வகையில் பிரதிவாதி எவ்வளவு ரூபாய் செலுத்தி வைத்தார் என்பதை என்னால் தற்பொழுது சொல்லமுடியாது. அந்த வங்கி கணக்கின் விவரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கின்றேன். வா.த.சா.ஆ.1 புரோநோட்டை நான் தான் தயார் செய்து எடுத்துவந்தேனா என்றால் ஆம். வா.த.சா.ஆ.1 புரோநோட்டில் கண்டுள்ள வருவாய் வில்லையில் முதல் வில்லையில் பிரதிவாதியின் கணவர் அருள்ஜோதியும் 2 வது வில்லையில் முதலாம் பிரதிவாதியும் கையெழுத்துப் போட்டிருக்கின்றார்கள். வா.த.சா.ஆ.1 புரோநோட்டின் முதல் பக்கத்தின் கடைசியாக renewed on 14.08.2018 என்று எழுதி இருப்பது என்னுடைய கையெழுத்துத்தான். வருவாய் வில்லைக்கு கீழே எழுதப்பட்ட தேதியை நான் எழுதவில்லை அவர்கள் எழுதியது தான். இரண்டு கையெழுத்தும் இடப்பட்டுள்ள மைகளுக்கு இடையே வேறுபாடு இருக்கிறதா என்றால் இல்லை இரண்டு பேரும் கையெழுத்தை அவர்கள் பேனாவில் போட்டுவிட்டு தேதி போடாததால் என்னுடைய கருப்பு மை பேனாவை வாங்கி அதில் தேதி போட்டார்கள். வா.த.சா.ஆ.2 12.12.2015 தேதியிட்ட ஆவணத்திலும் தேதி இவ்வாறு தான் இடப்பட்டுள்ளதா என்றால் சாட்சி புரோநோட்டை வாங்கி பார்த்துவிட்டு கையெழுத்து நீல மையிலும் தேதி கருப்பு மையிலும் எழுதப்பட்டுள்ளது என்றும் கூறுகின்றார். (தேதி நீல நிற மையால் எழுதப்பட்டுள்ளது). வா.த.சா.ஆ.2 புரோநோட்டிலும் renewed என்று நான் தான்

எழுதியிருக்கிறேன். பணம் 17.08.2015 அன்று NEFT மூலமாக அனுப்பிய போது எத்தனை பேப்பர்களில் கையெழுத்து வாங்கினேன் என்றால் ஒரு புரோநோட்டில் கையெழுத்து வாங்கினேன். வா.த.சா.ஆ.1 மற்றும் வா.த.சா.ஆ.2 இரண்டு புரோநோட்டுகளிலும் கண்டுள்ள தொகையை செலுத்திய பிறகு தான் மூன்றாவது புரோநோட்டில் கண்டுள்ள தொகையை நான் கடனாக செலுத்தினேனா என்றால் அப்படி இல்லை. நான் அடுத்த முறை சாட்சியம் அளிக்க வரும்போது வாதிகள் 1 முதல் 4 வரையிலுள்ளவர்களின் வங்கி கணக்கு விவரங்களை கொண்டுவர முடியுமா என்றால் முடியும் கொண்டு வருகிறேன்.

(அறிவார்ந்த 1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).